## 2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ம் நாள் திங்கள்கிழமை

**I.A.No.21/2025 in O.S.No. 410/2019**

**I.A.No.22/2025 in O.S.No.410/2019**

1. வசந்தா (இறப்பு)
2. வேலு
3. மாரியம்மாள்
4. ஜெயக்குமார் ...மனுதார்கள்/வாதிகள்

/Vs/

1. சமுத்திரம்
2. கோபால்
3. ஐயப்பன்
4. முத்துக்குட்டி
5. தங்கமணி
6. அர்ஜுனன் ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 25.10.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.க.சிவகார்த்தீஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அருண்குமார் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை ஆராய்ந்தும் இந்நீதிமன்றம் வழங்கும்,

### பொதுவான உத்தரவு

(I) I.A.No.21/2025 ஆனது அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் தரப்பு சாட்சிகளாக பி.வா.சா.1, பி.வா.சா.2 மற்றும் பி.வா.சா.3 ஆகியோர்களை முழுமையாக குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்க (Recall) செய்ய உத்தரவிடக்கோரியும்

(ii) I.A.No.22/2025 ஆனது மனுதாரர் பக்கம் வழக்கில் பிரதிவாதிகளின் தரப்பு சாட்சிகளை முழுமையாக குறுக்கு விசாரணை செய்வதற்காக மறு திறப்பு (Reopen) செய்ய உத்தரவிடக்கோரியும் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:-**

2.1) தாவா தபசில் சொத்தை மனுதாரர்கள்/வாதிகள் அமைதியான முறையில் அனுபவம் செய்வதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் அவரது வகையாட்கள் இடையூறு செய்யாதிருக்க வேண்டி உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.4 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு மேற்படி சாட்சிகளில் பி.வா.சா.4 ஐ தவிர மற்ற சாட்சிகளை அவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள், நிரூபண வாக்குமூலங்கள் மற்றும் தாவா சொத்தின் இதர விபரங்களை குறிப்பிட்டு, மனுதாரர்கள் தரப்பில் யாதொரு கேள்விகளும் குறுக்கு விசாரணையில் கேட்கப்படவில்லை. அந்த சாட்சிகளை பொறுத்து குறுக்கு விசாரணை சமயத்தில் பெயரளவிலான கேள்விகள் மட்டுமே கேட்கப்பட்டது.

2.3) மனுதாரர்கள்/வாதிகள் பக்கம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் போது எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களின் தன்மையை முழுமையாக நீதிமன்றத்திற்கு எடுத்து கூற இயலவில்லை. மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்ய வழக்கின் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகளான பி.வா.சா.1, பி.வா.சா.2 மற்றும் பி.வா.சா.3 ஆகியோரை முழுமையாக குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கை மீண்டும் ரீ–ஓப்பன் மற்றும் ரீ– கால் செய்ய உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிருரையின் சுருக்கம்**

3.1) மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய 31.01.2024 ல் முதல் வாய்தா போடப்பட்டு, அதன்பின் 08.02.2024, 13.02.2024, 20.02.2024, 26.02.2024 ஆகிய தேதிகளில் வரை வாய்தா கொடுக்கப்பட்டு 26.02.2024 மீண்டும் வாய்தா கேட்டதால்

ரூ.500/– அபராதம் விதிக்கப்பட்டு மேற்படி ரூ.500/– செலுத்தப்பட்டு மீண்டும் 29.02.2024 வாய்தா கேட்கப்பட்டு 04.03.2024, 07.03.2024 வாய்தா போடப்பட்டது. இறுதியாக 07.03.2024 ல் நீதிமன்றம் தெளிவாக மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயார் இல்லை என்பதால் சாட்சி முடிக்கப்பட்டு கூடுதல் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்கு போடப்பட்டது.

3.2) மேற்படி 14.03.2024 ல் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு 21.03.2024 ல் 6 ம் எதிர்மனுதாரர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்ய 30.04.2024 ல் அனுமதி கேட்கப்பட்டு 05.06.2024 ல் வாய்தா போடப்பட்டது. 05.06.2024 ல் வாய்தா கேட்கப்பட்டு 12.06.2024, 18.06.2024 ல் வாய்தா கேட்கப்பட்டு 18.06.2024 ல் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு மீண்டும் வாய்தா கேட்கப்பட்டு 24.06.2024 ல் குறுக்கு விசாரணை போடப்பட்டு அன்று ரூ.300/– அபராத தொகை விதிக்கப்பட்டு மேற்படி வழக்கானது 10.07.2024 ல் வாய்தா போடப்பட்டது. 10.07.2024 ல் 01.08.2024, 08.08.2024 கோரப்பட்டு இறுதியாக 08.08.2024 ல் பி.வா.சா.2 Evidence closed என முடிக்கப்பட்டது. 06.09.2024 ல் பி.வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக 13.09.2024 ல் வாய்தா போடப்பட்டது.

3.3) 13.09.2024 ல் மீண்டும் வாய்தா கேட்கப்பட்டு 21.09.2024, 25.09.2024, 21.10.2024, 11.11.2024, 16.11.2024, 27.11.2024 என வாய்தா போடப்பட்டு 27.11.2024 ல் ரூ.500/– அபராதம் விதிக்கப்பட்டு07.12.2024 ல் அன்று வாய்தா போடப்பட்டது. 07.12.2024 ல் அபராதத் தொகை செலுத்தாததால் Dw3 சாட்சியம் முடிக்கப்பட்டது. அதன்பிறகு Dw4 விசாரிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதுரைக்காக வழக்கு வாய்தா போடப்பட்டது. ஏனெனில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரை குறுக்கு விசாரணை செய்ய போதுமான அளவு வாய்ப்புகளை நீதிமன்றம் வழங்கியும் குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்து விட்டு வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர்களின் மனுவை இந்த எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## <u>தீர்வு</u>

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6) மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இந்த மனுவின் வாதத்தின் போது மனுதாரர்கள் தரப்பில் இதற்கு முன்பு முன்னிலையாக வழக்கறிஞர் பெயர் அளவிலான கேள்விகளை மட்டுமே கேட்டதால் மனுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் எனவே பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகளை முழுமையாக விசாரணை செய்யும் பொருட்டு அவர்களை ரீ-கால் செய்ய வேண்டியது அவசியம் என்று கூறினார்.

7) வழக்கு ஆவணங்களை பார்வையிடுகையில், 10.06.2025 அன்று தற்போதைய மனுதாரர்களின் வழக்கறிஞர் இந்த வழக்கில் வாக்காலத்து தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது. மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க செய்ய வேண்டி வாதிடும்போது கே.கே.வேலுச்சாமி // எதிர் // பழனிச்சாமி (2011 AIR SCW 2296) என்ற வழக்கையும், வதிராஜ் நாகப்பா வர்னேக்கர் //எதிர்// சரத்சந்த் பிரபாகர் கோகேட் (AF2009 SC 1064) மற்றும் சுபாகரன்சிங் //எதிர்// அபைராஜ்சிங்க் (2025 INSC 628) ஆகிய வழக்குகளை மேற்கோள்காட்டி வாதிடப்பட்டது.

8) இந்த வழக்கின் சூழ்நிலையையும் பொருண்மையையும் ஒருசேர நோக்கும்போது மனுதாரர்களின் முந்தைய வழக்கறிஞர் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகளை சரியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்ட சங்கதி இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகளுக்கு ஏற்படும் செலவுத்தொகையை மனுதாரர் செலுத்துவதன் பேரில் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவாக,</u>

(I) I.A.No.21/2025 மனுவானது மனுதாரர்கள் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 சாட்சிகளுக்கு தலா ரூ.500/—ஐ (மொத்தம் ரூ.1500) 07.11.2025ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

(ii) I.A.No.22/2025 மனுவானது மனுதாரர்கள் ரூ.500/–ஐ திருநெல்வேலி சட்ட உதவி மையத்தில் 07.11.2025ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 03ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Uploaded on

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.11.05 15:21:41 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

Uploaded on

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.11.05 15:21:51 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

**I.A.No.21/2025 in O.S.No. 410/2019**
**I.A.No.22/2025 in O.S.No.410/2019**

சீரான – உத்தரவு
நாள்–03.11.2025